# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

**மனு எண் : 0001 / 2016 / ந**

**ஆணை எண் :** 008/ 2016

**நாள் :** 07/03/2016

திரு. த. மாரியப்பன்,
வார்டு எண்.4, கதவு எண்.2/101–A,
சான்றோர்மடத்து தெரு,
சிந்தாமணி, புளியங்குடி – 627 855,
திருநெல்வேலி மாவட்டம்.

**.... முறையீட்டு மனுதாரர்**

நகராட்சி ஆணையர்,
புளியங்குடி நகராட்சி
புளியங்குடி.

**.... எதிர் மனுதாரர்**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், வார்டு எண்.4, சான்றோர் மடத்துத் தெரு, கதவு எண்.2/101–A–ல் வசிக்கும் திரு.T. மாரியப்பன் அவர்கள் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தாக்கல் செய்த முறையீட்டு மனு 4.01.2016அன்று பெறப்பட்டு 01/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது.

**ஆணை:**

திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், புளியங்குடி நகராட்சி, வார்டு எண்.4, சான்றோர் மடத்துத் தெரு, கதவு எண்.2/101–A–ல் வசிக்கும் திரு. த. மாரியப்பன் அவர்கள், மேற்படி நகராட்சியில் வருவாய் உதவியாளர் பணியிடம் நியமனம் செய்ததில் ஏற்பட்ட முறைகேடுகள் குறித்து இம்முறைமன்ற நடுவத்திற்கு முறையீடு செய்திருந்தார் மேற்படி முறையீட்டு மனுவில்

புளியங்குடி நகராட்சியில் வருவாய் உதவியாளர் பணியிடம் நியமனம் செய்யும்பொழுது முன்னுரிமையில் முதல் இடத்தில் இருந்த தன்னை பதிவு மூப்பு, பணி அனுபவம் அடிப்படையில் தேர்வு செய்யாமல், 3–வது இடத்தில் தன்னைவிட 7 வருடங்கள் பின்தங்கிய இளையவரை சட்டத்திற்கு புறம்பான முறையில் நியமனம் செய்துள்ளனர் என்றும், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலக பதிவு மூப்பு அடிப்படையில் தனக்கு அப்பணியிடம் வழங்க ஆவண செய்யுமாறு முறையிட்டுள்ளார்.

2. முறையீட்டுதாரரின் கோரிக்கை சம்பந்தமாக நகராட்சி ஆணையரின் அறிக்கை பெறப்பட்டது. புளியங்குடி நகராட்சியில் வருவாய் உதவியாளர் பணியிடங்களில் நியமனம் செய்ததில், எவ்வித முறைகேடோ அல்லது சட்டத்திற்கு புறம்பான முறையிலோ பணி நியமனம் எதுவும் செய்யப்படவில்லை என்று தெரிவித்துள்ளார். மேலும் முறையீட்டுதாரர் தன்னை வருவாய் உதவியாளர் பணியிடத்தில் நியமனம் செய்யாததை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் வழக்கு தொடுத்துள்ளதாகவும், வழக்கு எண்.WP No.17291/2014 தற்பொழுது நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

முறையீட்டுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்கு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் நிலுவையில் உள்ளதால், தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டப்பிரிவு 10/3 (b)ன் படி நீதிமன்றமொன்றின் முன்பு நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவத்தால் விசாரணை செய்தல் கூடாது. எனவே முறையீட்டுதாரரின் முறையீட்டின் மீது இம்முறைமன்ற நடுவத்தால் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ள இயலாது என முடிவு செய்து தெரிவித்து ஆணையிடப்படுகிறது.

2017 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

/ஒம்/

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/**
**உண்மை நகல்**

**உதவி பதிவாளர்**

**பெறுநர்**

1. திரு. த. மாரியப்பன்,
வார்டு எண்.4, கதவு எண்.2/101–A,
சான்றோர்மடத்து தெரு,
சிந்தமணி, புளியங்குடி – 627 855,
திருநெல்வேலி மாவட்டம்.
மேட்டூர் அணை – 636 456.

2. ஆணையர்,
புளியங்குடி நகராட்சி.